**ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**
(தேசிய தர மதிப்பீட்டுக் குழுவால் (ஏ) கிரேடு பெற்றது.
**பல்கலைக்கழக மானியக் குழுவால் 2(F) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது)**
காட்டேரி, ஊத்தங்கரை - 636 902.

**தமிழாய்வுத்துறை**

**முத்தமிழ் முகாம் - ஒரு நாள் தேசியக் கருத்தரங்கு**
31.01.2023

**கருத்தரங்க அறிக்கை**

ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) ஊத்தங்கரை, தமிழாய்வுத் துறையின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவு நடத்திய முத்தமிழ் முகாம் - ஒரு நாள் தேசியக் கருத்தரங்கு என்ற தலைப்பில் 31.01.2023 ஒரு நாள் சிறப்பாக நடைபெற்றது.

இக்கருத்தரங்கைக் கல்லூரியின் நிறுவனர் **திருமிகு.வே. சந்திரசேகரன்** அவர்கள் தலைமையேற்று தொடங்கி வைத்தார். கல்லூரின் செயலர் **திரு. அ.ச. அருண்குமார்** அவர்களும் கல்லூரியின் முதல்வர் **முனைவர் ந.குணசேகரன்** அவர்களும் கருத்தரங்கத்திற்கு வாழ்த்துரை வழங்கினர்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) இணைந்து நடத்திய ஒரு நாள் தேசியக் கருத்தரங்கிற்கு **மருத்துவர் ஜெய.ராஜமூர்த்தி** மருத்துவத் துறை இயக்குநர், இஎஸ்ஐ பரிவு, சென்னை அவர்கள் எத்திசையும் போற்றும் முத்தமிழ் என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். மற்றும் இயற்றமிழில் **முனைவர் சொற்கோ இரா.கருணாநிதி** அவர்கள் சங்கப் பாடல்களின் தனிச் சிறப்பு என்னும் தலைப்பில் மாணவர்களிடையே சங்கப் பாடல் குறித்து பல்வேறு கருத்துகளை வெளிப்படுத்தினார். இசைத்தமிழில் **இயக்குநர் விஜயசங்கர்** அவர்கள் திரை இசையின் தேன் தித்திப்பு என்னும் தலைப்பில் கண்ணதாசனின் பாடல்களைப் பாடியும் அப்பாடல்களுக்கு தரும் விளக்கத்தைத் தனது உரையில் எடுத்துரைத்தார். நாடகத்தமிழில் **முனைவர் கி.பார்த்திபராஜா** அவர்கள் நாடக வளர்ச்சியின் வடிவமைப்பு என்னும் தலைப்பில் இலக்கியங்களில் வெளிப்படும் நாடகம் குறித்தும் நாடக வரலாறு குறித்தும் பல்வேறு கருத்துக்களை தன் உரையில் வெளிப்படுத்தினார்.

இதில் 300 க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்துக் கொண்டனர். இறுதியாக மாணவர்கள் தங்களின் ஐயங்களைக் கேட்டு பின்னூட்டங்களை வழங்கினர். கருத்தரங்கின் நிறைவாக தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் **திரு. செ. தெய்வம்** அவர்கள் நன்றி கூறினார்.